முடித்தார். அப்படியென்று சொன்னால், அங்கே வருகின்ற கருத்து, எங்கேயிருந்து வருகின்றது என்று சொன்னால், கட்சிக்கு அப்பாற்பட்டு, மதத்திற்கு அப்பாற்பட்டு, சாதிக்கு அப்பாற்பட்டு, அடி மனதிலிருந்து வருகின்ற கருத்து. (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி உணர்வு இல்லாதவர்கள் இவர்கள். இந்த நாட்டு மக்கள் நிச்சயமாக இவர்களை அடையாளம் காட்டுவார்கள். தனியாகச் சென்றாலும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள், கூட்டுச் சேர்ந்து சென்றாலும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) காரணம், தூக்கிவிட்டவரை, உயர்த்திவிட்டவரை ஒதுக்கிவிட்ட காரணத்தினால், ஏற்கெனவே ஏற்றுக்கொண்டாலும் உங்களை நிச்சயமாக ஒதுக்கிவைப்பார்கள் என்பதை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இவர்களுக்கு விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது சம்பந்தபட்டவர்களுக்குப் புரிந்தால் சரி.

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், மதிப்பீட்டுக் குழுத் தலைவர் அவர்கள்.

திரு. பி.ஜி. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோரும் எல்லாமும் பெற்று, எல்லா வகைகளிலும் முழு வளர்ச்சி அடைந்த முதன்மை மாநிலமாக தமிழகத்தை உருவாக்க, தினம், தினம் வளர்ச்சித் திட்டங்களை வாரி, வாரி வழங்கி, அக்ஷய பாத்திரமாக விளங்கும் இதய தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, இந்த அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கின்றேன். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2012–2013 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் ஏழாவது அறிக்கையினை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

(ஆ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன், பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர்.*

***திரு. கே.பி. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்திரையை மீட்டெடுத்த மகம் தந்த ஜெயமே! மக்கள் எதிர்நோக்கும் நாளைய பாரதமே! (மேசையைத் தட்டும் ஒலி) பூலோக வைகுண்டம் தேர்ந்தெடுத்த தன்னிகரில்லா தலைவியே, (மேசையைத் தட்டும் ஒலி) வாரி வழங்கி வழி காட்டிய கொடை வள்ளல்களையெல்லாம் மிஞ்சிய வாழும் வள்ளலே! தங்கள் பொற்பாதம் பணிந்து வணங்கி, 2012–2013 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 101 முதல் 115 வரையிலான 15 அறிக்கைகளை குழுத் தலைவரின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.*

(இ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு அரசுக் கொறடா திரு. ஆர். மனோகரன், மனுக்கள் குழுத் தலைவர் அவர்கள்.*

திரு. ஆர். மனோகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவை அறிந்து, சாதனை புரிந்து நாளும், நாளும் தமிழகத்திற்குப் பெருமை சேர்க்கும் ஸ்ரீரங்கம் தந்த ஸ்ரீவைகுண்டமே! ஸ்ரீரங்கத்திலிருந்து புறப்பட்டு இந்தப் புவி அரங்கைக் காக்கும், நாங்கள் நாளும் வழிபடும் குல தெய்வமே! சோர்ந்து கிடந்த தமிழகத்தை சுறுசுறுப்பாக்கிய தாயே, தமிழின் மாண்பும், மரபும் காத்த சிங்கநிகர் தலைவியே! (மேசையைத் தட்டும் ஒலி) செந்தமிழர் குலதெய்வமாய் அவதாரம் எடுத்திருக்கும் வருங்கால இந்தியாவே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருவடி பணிந்து வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் பத்தொன்பது முதல் இருபத்தொன்பது வரையிலான 11 அறிக்கைகளை குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.